**கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.**

**முன்னிலை : செல்வி. D. ஜெயபாரதி, L.L.M.,**
நீதித்துறை நடுவர்.

கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

2058 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீபராபவ வருடம் வைகாசி மாதம் 11-ம் நாள்

2026-ம் ஆண்டு மே மாதம் 25-ஆம் நாள் திங்கள் கிழமை

# C.C. No. 177/2025

CNR No.TNTH02-001-698-2025

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டு பட்டிகை வழக்கு எண் | : | 177/2025 |
| 2. | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட எண் | : | TNTH02-001-698-2025 |
| 3. | குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>பழனிசெட்டிபட்டி காவல்நிலையம்,<br>தேனி. |
| 4. | குற்ற எண் மற்றும் இதச பிரிவுகள் | : | Cr.No.494/2024; U/s. 329(3), 126(2), 296(b), 351(3) of BNS and 4 of TNPHW Act |
| 5. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர், வயது, தந்தைப்பெயர் மற்றும் முகவரி. | : | 1. ஒச்சனத்தேவர், 72/24, த.பெ.பெரியகருப்புத்தேவர், மாரியம்மன்கோவில் தெரு, மாரியம்மன்கோவில்பட்டி, கோடாங்கிபட்டி, தேனி மாவட்டம்.<br><br>2. ராஜம்மாள், 68/24, க.பெ. ஒச்சனத்தேவர் (எ) ஒச்சன், கிழக்குத் தெரு, மாரியம்மன்கோவில்பட்டி.<br><br>3. சிவக்குமார், த.பெ. ஒச்சனத்தேவர்,<br>மாரியம்மன்கோவில் தெரு,<br>மாரியம்மன்கோவில் பட்டி.<br><br>4. செல்லமணி, க.பெ.ஆண்டிசாமி,<br>கிழக்குத் தெரு, மாரியம்மன்கோவில்பட்டி. |
| 6. | சம்பவ தேதி | : | 11.12.2024 |

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:53:57 +0530

| | | | |
|---|---|---|---|
| 7. | புகார் அளிக்கப்பட்ட தேதி | : | 11.12.2024 |
| 8. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1–வது எதிரி – 12.12.2024<br>2, 3, 4 எதிரிகள் முன் பிணை பெற்றுச் சென்றுவிட்டதால் கைது செய்யப்படவில்லை. |
| 9. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 1–வது எதிரி – 13.12.2024<br>2, 3, 4 எதிரிகள் 09.01.2025 ( முன் பிணை) |
| 10. | எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | : | 1, 3 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS and 4 of TNPHW Act ன் கீழும், 2, 4 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. |
| 11. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | 1, 3 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS and 4 of TNPHW Act ன் கீழும், 2, 4 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| 12. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| 13. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 27.05.2025 |
| 14. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 24.04.2026 |
| 15. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 30.04.2026 |
| 16. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1, 3 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS and 4 of TNPHW Act ன் கீழும், 2, 4 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS பிரிவுகளின் கீழும் வனையப்பட்ட |

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:54:10 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருகிறது. |
| 17. | தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவில், 1, 3 எதிரிகள் மீதான 329(3), 126(2), 296(b), 351(3) BNS and 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்தும், 2, 4 எதிரிகள் மீதான 329(3), 126(2), 296(b), 351(3) BNS பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்தும் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானித்து U/s.271(1) BNSS–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது . |
| 18. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | இல்லை |
| 19. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

இவ்வழக்கானது 02.04.2025–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.காமாட்சிபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த, இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by
JAYABHARATHI DURAI
Date: 2026.05.26
15:54:19 +0530

**<u>தீர்ப்புரை</u>**

**1) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

வாதி தரப்பினருக்கும், எதிரிகள் தரப்பினருக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்ததாகவும், இந்நிலையில், கடந்த 11.12.2024-ம் தேதி 14.00 மணிக்கு வாதி வசந்தி மற்றும் அவரது கணவரான சாட்சி-2 சரவணன் ஆகியோர் வாதியின் இடத்தில் சென்று மண் அடிப்பதற்காக சென்றபோது எதிரிகள் 4 பேரும் வாதியின் இடத்திற்குள் அத்துமீறி நுழைந்து லாரியை மறைத்துக்கொண்டு உட்கார்ந்ததாகவும், வாதி ஏன் இப்படி தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் 4 பேரும் வாதியை பார்த்து ஏண்டி தேவடியா முண்ட நீ எங்க இடத்துல இருந்து ஒரு பிடி மண் கூட எடுக்க முடியாது என்று அசிங்கமாகப் பேசியும், இன்றைக்கு ஒன்னு நீங்க இருக்கனும், இல்ல நாங்க இருக்கனும் உன்னையும் உன் புருசனையும் கொன்னு இந்த இடத்துல புதைச்சுருவோம் என்று அருவாளைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அதன் காரணமாக 1, 3 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS and 4 of TNPHW Act ன் கீழும், 2, 4 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS பிரிவுகளின் கீழும் பழனிசெட்டிபட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2) <u>அழைப்பாணை சார்வு செய்தல், நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு பற்றி வினவுதல்:</u>**

குற்றமுறையீட்டாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிரிகள் மீதான இறுதி அறிக்கை நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொண்ட பின் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில், எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரிகள் குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தோன்றியதால் 2, 4 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS பிரிவுகளின் கீழும், 1, 3 எதிரிகள் மீது 329(3), 126(2), 296(b), 351(3) BNS and 4 of TNPHW Act ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:54:26 +0530

எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினர்.

3) எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் அரசுத் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசு தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் உள்ளது.

4) <u>அரசுத்தரப்பின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் புலனாகும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>

(4–1) அ.சா.1. வசந்தி தனது சாட்சியத்தில் தங்களுக்கு சொந்தமான திண்டுக்கல்–குமுளி ரோட்டில் மாரியம்மன்கோவில்பட்டி விலக்கில் உள்ள இடத்தில் 11.12.2024–ம் தேதியன்று மண் கொட்டுவதற்காக பகல் 2.00 மணியளவில் சென்றபோது எதிரிகள் நால்வரும் லாரியை வழி மறித்து 1, 2 எதிரிகள் தேவடியா அவுசாரி என்று அசிங்கமாகப் பேசியதாகவும், 4–வது எதிரி தனது கணவரை கல்லால் எறிய வந்தார் என்றும், 3–வது எதிரி அரிவாளை எடுத்து வந்து உங்கள் இருவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அந்த இடத்தை நீங்கள் விற்க முடியாது என்று சண்டை போட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், புகார் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(4–2) அ.சா.2. சரவணன் தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மனைவி என்றும், கடந்த 04.11.2022 அன்று தனது நிலத்தை பார்வையிட சென்றபோது பிரச்சனை செய்ததாகவும் அதன் காரணமாக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து 1–வது எதிரி வகையறாவினர் நிலத்திற்குள் வரக்கூடாது என்று நிவாரணம் பெற்றிருந்ததாகவும், கடந்த 11.12.2024–ம் தேதி கூடலூரை சேர்ந்த அறிவழகன், பிரபாகரன் ஆகியோர்களுக்கு மேற்படி நிலத்தை வாடகைக்கு விடுவதற்காக பகல் 2 மணியளவில் தானும் அ.சா.1–ம் சென்றபோது எதிரிகள் அனைவரும் அங்கு வந்து லாரியை வழிமறித்து ஓட்டுனரை அடிக்க சென்றதாகவும், எதிரிகளிடம் ஏன் இப்படி பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு தனது மனைவியை எதிரிகள் தேவடியா முண்ட

என்று அசிங்கமாகப் பேசியும், கொன்று விடுவேன் என்று மிரட்டியும், 3–வது எதிரி இங்கு பிணம் விழுந்தே ஆக வேண்டும் என்றும் பேசியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(4–3) அ.சா.3. ராஜீவ்காந்தி தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் குறித்தும், வாகனத்தை வழிமறித்து எதிரிகள் சண்டை போட்டதாகவும், அ.சா.1, 2 சாட்சிகளை பார்த்து எதிரிகள் அசிங்கமாகப் பேசியதாகவும், அதன்பின்னர் அ.சா.2 காவல் நிலையம் சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(4–4) அ.சா.4. கலையரசன் தனது சாட்சியத்தில் 11.12.2024–ம் தேதியன்று இரவு 7.00 மணிக்கு மாரியம்மன்கோவில்பட்டி பைபாஸ் அருகே கூட்டமாக இருந்ததாகவும், போலீசாரும் இருந்தார்கள் என்றும், எதிரிகள் அங்கு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அங்கு படம் வரைந்து எழுதிக் கொண்டிருந்தார்கள் என்றும், அதில் தானும், அழகர் தேவன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.2 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(4–5) அ.சா.5. பிரபாகரன் தனது சாட்சியத்தில் 11.12.2024 அன்று பகல் 2 மணி அளவில் அசா1ன் கணவர் சரவணன் வீட்டிற்கு நாங்கள் டிப்பர் லாரியில் மண் ஏற்றிக்கொண்டு வந்தோம். அப்போது சரவணன் அவரது மனைவியும் அங்கு இருந்தார்கள். அப்போது எதிரிகள் அங்கு வந்து மண் கொட்ட கூடாது என்ற பிரச்சினை செய்தார்கள். அப்போது எங்கள் வண்டியை மறித்து அசா1யை தேவிடியா என்று அசிங்கமாக பேசி, எதிரிகள் இந்த இடத்திற்கு உங்களிடம் பட்டா இருந்தாலும், இல்லையென்றாலும் உள்ளே வந்தால் காலை உடைப்பேன் என்று கூறினார்கள். அது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(4–6) அ.சா.6. மணிமாறன், சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 11.12.2024 அன்று பழனிசெட்டிபட்டி காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது 18.00 மணிக்கு அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 494/2024 ஆக பிரிவுகள் 329(3), 126(2), 296(b), 351(3) of BNS மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் படியும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.*3* பதிவு செய்ததாகவும்*,* புகாரையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும்,

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:54:40 +0530

அன்றைய தினமே இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் 07.00 மணிக்கு சென்று சாட்சிகள் கலையரசன், அழகர்தேவன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், மாதிரி வரைபடம் அ.சாஆ.4 என்றும், சாட்சிகள் வசந்தி, சரவணன், பிரபாகரன், ராஜீவ்காந்தி, கலையரசன், அழகர்தேவன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சம்பவம் உண்மையென தெரிய வந்து எதிரிகளை தேடிவந்த நிலையில் மாரியம்மன்கோவில்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு அருகே 1–வது எதிரி ஒச்சனத்தேவர் என்பவரை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், மற்ற எதிரிகள் முன் ஜாமீன் பெற்று விட்டதால் கைது செய்யவில்லை என்றும், பின்னர் வழக்கு விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கின் அ.சா.1 முதல் 6 வரையிலான சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை பிரிவு 313(1)(ஆ) CRPC–ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துரைத்து வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சியம் எனவும், தங்கள் மீதான வழக்கு பொய் வழக்கு என்றும் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினர்.

6) <u>எதரிகள் தரப்பு எழுத்துப் பூர்வமான வாதுரையின் சுருக்கம்</u>

அரசு தரப்பு வழக்கானது வழக்கின் சம்பவம் 11.12.2024–ம் தேதி மதியம் 2.00 மணிக்கு நடந்ததாகவும், அன்றைய தினமே மாலை 6.00 மணிக்கு அ.சா.1 புகார் கொடுத்ததாகவும், வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புகாரினைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அன்றைய தினம் மாலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று புலன் விசாரணையை ஆரம்பித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். BNS 173(3)–ன் படி புலன் விசாரணை அதிகாரி புகாரினை பெற்றவுடன் சம்பவ இடம் சென்று புகாரின் உண்மை தன்மையை விசாரித்து அதில் குற்ற சம்பவம் நடந்துள்ளதாக முடிவுக்கு வந்தால் மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றும், ஆனால் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி முதல் கட்ட

விசாரணை செய்யாமல் நேரடியாக வழக்கு பதிவு செய்தது சட்டப்படி தவறு என்றும், சாட்சிப் பட்டியலில் புகார்தாரரும், அவரது கணவரும் தவிர மற்ற சாட்சிகள் அனைவரும் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கூடலூரை சேர்ந்த நபர்களை சாட்சிகளாகச் சேர்த்துள்ளார் என்றும், BNS 329(3)–ன் படி எதிரிகள் புகார்தாரரின் இடத்திற்குள் அத்துமீறி நுழைந்ததாக உள்ளது என்றும், உண்மையில் சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் இடம் தற்போது வரை எதிரிகளின் முழு அனுபவத்தில் உள்ளது என்பதால், புகார்தாரர்தான் சம்பவ இடத்திற்குள் அத்துமீறி நுழைய முற்பட்டுள்ளார் என்றும், சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் இடம் எதிரிகளின் முழுமையான அனுபவத்தில் உள்ள நிலையில், புகார்தாரர் எதிரிகளின் அனுபவத்தை அபகரிக்க முயற்சிக்கும்போது எதிரிகள் தங்களது சொத்தினை காப்பாற்றிக்கொள்ள செய்த செயல் சட்டப்படி தவறல்ல என்றும், எனவே, BNS 126(1)–ன் படியான குற்றச்சாட்டு தவறானது என்றும், BNS 351(3)–ன் படி புகார்தாரரரை எதிரிகள் அரிவாளை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும், ஆனால், புகார்தாரரான அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் இந்த வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு பின்னரும் தான் வழக்கம்போல தொழில் செய்து வருகிறேன் என்றும், தனது தொழிலுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரிதான் என்றும் மேற்கண்ட சட்டப்பிரிவுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார் என்றும், எனவே, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரிகளை விடுதலை செய்யுமாறும் வாதிடப்பட்டுள்ளது.

7) இரு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

8) <u>**தீர்வு மற்றும் தீர்வுக்குரிய காரணங்கள்:**</u>

**இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

அ.சா.1 தான் கொடுத்த புகார் மனுவில் 11.12.2024–ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் தானும், அ.சா.2 மற்றும் மண் அடிப்பவர்களும் தங்களது இடத்திற்கு சென்றதாகவும், அப்போது 1 முதல் 4 எதிரிகள் லாரியை மறைத்துக்கொண்டு உட்கார்ந்தார்கள் என்றும், ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1, 2 எதிரிகள் அ.சா.1–ஐ பார்த்து தேவடியா முண்ட நீ எங்க இடத்துல இருந்து ஒரு பிடி மண் கூட எடுக்க முடியாது என்று அசிங்கமாகப் பேசியதாகவும், அப்போது 3–வது எதிரி இன்றைக்கு ஒன்னு நீங்க இருக்கணும் இல்ல நாங்க இருக்கணும் உன்னையும், உன் புருசனையும் கொன்னு இந்த இடத்துல புதைச்சுருவேன் என்று அரிவாளைக் காட்டி மிரட்டியதாகவும், 4–வது எதிரி அங்கு கீழே கிடந்த கல்லை எடுத்துக்கொண்டு அ.சா.2–ஐ பார்த்து இந்த இடத்துக்கு ரெகார்டு இருக்கோ இல்லையோ நீ இந்த இடத்துக்குள்ள வந்தா இந்த கல்லை வைத்து எரிந்து உன் காலை உடைச்சுருவேன் என்று கல்லைக் காட்டி மிரட்டியதாகவும். எனவே, மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தான் புகார் கொடுத்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

புகார் குறித்து அ.சா.1 தனது முதல் விசாரணையில்,

> " என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். "

என்றும் சாட்சியமளித்துள்ளார், மேற்படி அ.சா.1 சாட்சியத்தை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது

> " இந்த வழக்கின் புகாரினை எனது கணவர்தான் தயார் செய்தார் என்றாலும் அதில் உள்ள விபரங்கள் முழுவதும் எனது கணவருக்குதான் தெரியும் என்றாலும் சரிதான். எனக்கும் கொஞ்சம் தெரியும்."

என்று சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது உண்மையில் பாதிக்கப்பட்ட அ.சா.1 எதிரிகள் மீது புகார் கொடுத்தாரா ? அல்லது அ.சா.1–ஐ பயன்படுத்தி அவரது கணவரான அ.சா.2 புகார் கொடுத்தாரா ? என்று சந்தேகம் எழுகிறது.

9) அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் 11.12.2024 அன்று தங்களது இடத்தில் மண் கொட்டுவதற்காக சென்றோம், அப்போது எதிரிகள் நால்வரும் லாரியை வழி மறித்தார்கள் என்றும், 1, 2 எதிரிகள் தன்னை தேவிடியா, அவுசாரி என்று அசிங்கமாகப்

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:55:11 +0530

பேசியதாகவும் சாட்சியமளித்துள்ளார். சம்பவ சாட்சியான அ.சா.1–ன் கணவரான அ.சா.2–ம் தனது நீதிமன்ற சாட்சியத்தில் தங்கள் இடத்தில் மண் அடிப்பதற்காக தாங்கள் எடுத்தச் சென்ற லாரியை எதிரிகள் வழி மறித்ததாகவும், ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்ட தனது மனைவியை எதிரிகள் தேவடியா முண்ட என்று அசிங்கமாகப் பேசியதாக சாட்சியமளித்துள்ளார். அதனால் மேற்படி எதிரிகள் மீது 296(பி) BNS பிரிவின் படியும் 1 மற்றும் 3 எதிரிகள் மீது 4 of TNPHW Act பிரிவின் படியும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 தன்னை 1 மற்றும் 2 எதிரிகள் தேவிடியா, அவுசாரி என்று அசிங்கமாகத் திட்டியதாக தனது நீதிமன்ற சாட்சியத்தில் கூறியுள்ளார். அதைப்போல் புகாரிலும் கூறியுள்ளார். சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் அ.சா.1–ன் கணவரான அ.சா.2 எதிரிகள் அனைவரும் அ.சா.1–ஐ தேவடியா முண்டா அவுசாரி முண்டா என்று திட்டியதாக சொல்லியுள்ளார். சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லப்படும் இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அ.சா.3 ராஜீவ் காந்தி எதிரிகள் அ.சா.2–ஐ தேவடியா மகனே என்று அசிங்கமாகப் பேசியதாக கூறி சாட்சியமளித்துள்ளார். மற்றொரு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.5 பிரபாகரன் அ.சா.1–ஐ எதிரிகள் தேவடியா என்று அசிங்கமாகப் பேசியதாக சொல்லியுள்ளார். மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களுக்கிடையேயான முரண்பாட்டினைப் பார்க்கும்போது உண்மையில், எந்தெந்த எதிரிகள் அ.சா.1–ஐ திட்டினார்கள் என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. மேற்படி எதிரிகள் யாரை திட்டினார்கள் என்பது குறித்தும் முரண்பாடு எழுகிறது. மேற்படி முரண்பாடு அரசு தரப்பு வழக்கிற்கு பின்னடைவாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10)** மேற்படி இரு சட்டப் பிரிவுகளின் கீழ் ஒருவர் தண்டிக்கப்படுவதற்கு குற்ற சம்பவமானது பொது இடத்திலோ அல்லது அதற்கு அருகாமையிலோ நடந்திருக்க வேண்டும். இவ்வழக்கின் சம்பவ இடம் குறித்து இரு தரப்பினர்களுக்கிடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்து வருவது வழக்கு ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. எனவே, மேற்படி இடம் பொது இடம் இல்லை என்பது தெரியவருகிறது. மேலும், சம்பவம் நடந்த சமயத்தில் அருகில் மக்கள் நடமாட்டம்

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:55:17 +0530

இருந்ததாகவோ, ஆட்கள் இருந்ததாகவோ குறிப்பிட்டு எந்த சங்கதிகளும் புகாரிலோ அல்லது அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் நீதிமன்ற சாட்சியத்திலோ குறிப்பிடப்படவில்லை. மேற்படி இடமானது பொது இடத்திற்கு அருகாமையில் உள்ள இடமா ? என்று பார்க்கும்போது இவ்வழக்கில் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடம் குமுளி – திண்டுக்கல் பைபாஸ் ரோட்டில் மண் ரோடு தள்ளி வாதி வசந்தியின் விவசாய நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், சம்பவ இடம் குறித்து

**11)** அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில்

> " சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மெயின் ரோடு என்றால் சரிதான். திண்டுக்கல் மெயின்ரோடும் இந்த வழக்கின் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் ஒச்சனத்தேவர் வீட்டிற்கும் இடையில் ஆன தூரம் சுமார் 3–4 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரியல்ல. 2–3 கிலோ மீட்டர் இருக்கும்."

என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடமானது பொது இடத்தில் இருந்து உட்புறமாக தள்ளி இருப்பது தெரியவருகிறது.

**12)** இதச 294(பி) பிரிவின் கீழ் ஒருவர் தண்டிக்கப்படுவதற்கு சம்பவமானது பொது இடத்திலோ அல்லது பொது இடத்திற்கு அருகிலோ நடைபெற்று அதனால் பிறருக்கு அருவருப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் சம்பவமானது வாதி தரப்பினருக்கும், எதிரிகள் தரப்பினருக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, மேற்படி இடத்தில் வாதி தரப்பினர் மண் கொட்டுவதற்காக சென்றபோது பிரச்சனை ஏற்பட்டு அதனால் எதிரிகள் அ.சா.1–ஐ அசிங்கமாகப் பேசியுள்ளனர் என்றும் சொல்லப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றதாகவோ, அதனால் பிறருக்கு அருவருப்பு ஏற்பட்டதாகவோ எந்த விதமான சங்கதிகளும் கூறப்படவில்லை. இரு தரப்பினருக்கும் பிரச்சனையாக உள்ள இடத்திற்குள் நடைபெற்றுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே, எதிரி மீதான இதச 294(பி) பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:55:25 +0530

**13)** அதேபோல் 1, 3 எதிரிகள் மீதான Sec.4 of TNPHW Act பிரிவின் கீழான குற்றத்தைப் பொறுத்து பரிசீலிக்கையில். மேற்படி பிரிவின் கீழ் தண்டிக்கப்படுவதற்கு சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றிருக்க வேண்டும்.

4. Penalty for harassment of women.—

> " Whoever commits or participates in or abets harassment of women in or within the precincts of any educational institution, temple or other place of worship, bus stop, road, railway station, cinema theatre, park, beach, place of festival, public service vehicle or vessel or any other place shall be punished with imprisonment for a term which may extend to three years and with fine which shall not be less than ten thousand rupees."

**14)** மேற்படி சட்டப்பிரிவினை உற்றுநோக்கும்போது சம்பவமானது எந்த இடத்தில் நடைபெற்றிருந்தாலும் இப்பிரிவின் கீழ் தண்டிக்கப்படலாம் என்று தோன்றினாலும் மேற்படி சட்டப்பிரிவின் கீழ் ஒருவர் தண்டிக்கப்படுவதற்கு சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றிருக்க வேண்டும் என்பது பல்வேறு முன்தீர்ப்புகள் முலம் நிலைநிறுத்தப்பட்ட சட்ட விதியாகும். சில பொருத்தமான பகுதிகள் கீழ்வருமாறு,

in Anbazhagan v. State represented by Inspector of Police, Pallikaranai Police Station, Kancheepuram District [CDJ 2012 MHC 2168].

> " 7. To attract offence under Section 4 of Tamil Nadu Prohibition of Harassment of Woman Act, 1998 offence must have taken place at a place particularly covered by Section. A private dwelling house is not one of such places Section 4 of Tamil Nadu Prohibition of Harassment of Woman Act,1998 reads as follows:
>
> " 4. Penalty of (harassment of woman) - whoever commits or participates in or abets (harassment of woman) in or within the precincts of any educational institution, temple or other place of worship, bus stop, road, railway station, cinema theatre, park, beach, place of festival, public

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:55:32 +0530

> service vehicle or vessel or any other place shall be punished with imprisonment for a term which may extend to three years and with fine which shall not be less than thousand rupees. ”
>
> . This Court by its order dated 25.10.2010 in Crl.O.P No.13501 of 2010 in Gouresh Mehra v. The State Rep. by Tr has held as follows:

> “ This Court is of the considered opinion that the words "any other place ” found in Section 4 are to be read "ejusdem generis".

**15)** இவ்வழக்கிலும் சம்பவம் நடந்த இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சனையாக உள்ள இடத்திற்குள் வைத்து நடந்ததாக தெரியவருகிறது. மேலும், அ.சா.1, அ.சா.2 ஆகியோர் நீதிமன்ற விசாரணையில் சம்பவம் பொது இடத்தில் வைத்து நடைபெற்றதாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேற்படி சங்கதிகளை பரிசீலிக்கும்போது இச்சம்பவமானது பொது இடத்தில் நடைபெறவில்லை என்பது தெரியவருகிறது. எனவே, மேற்படி 1, 3 எதிரிகள் மீதான Sec.4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16)** அ.சா.1 தான் கொடுத்த புகாரில் 11.12.2024–ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் தங்களது இடத்திற்கு சென்று மண் அடிப்பதற்காக சென்றபோது எதிரிகள் அசிங்கமாகப் பேசியும், 3–வது எதிரி இன்னைக்கு ஒன்னு நீங்க இருக்கனும் இல்ல நாங்க இருக்கனும் உன்னையும் உன் புருசனையும் கொன்னு இந்த இடத்துலே புதைச்சுருவேன் என அரிவாளைக் காட்டி மிரட்டியதாகவும், 4–வது எதிரி கல்லை எடுத்துக்கொண்டு அ.சா.1–ன் கணவரை பார்த்து எங்ககிட்ட இந்த இடத்துக்கு ரெகார்டு இருக்கோ இல்லையோ நீ இந்த இடத்துக்குள் வந்தா இந்த கல்லை வைத்து எறிந்து உன் காலை உடைச்சுருவேன் என்று கல்லை காட்டி மிரட்டியதாகவும் சொல்லியுள்ளார்.

**17)** அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் மாரியம்மன்கோவில்பட்டி விலக்கில் உள்ள இடத்தில் 11.12.2024–ம் தேதி மண் கொட்டுவதற்காக சென்றோம். அப்போது 4–வது எதிரி செல்லமணி தனது கணவரை கல்லால் எறிய வந்தார் என்றும், 3–வது எதிரி

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:55:40 +0530

சிவக்குமார் அரிவாளை எடுத்து வந்து உங்கள் இருவரையும் வெட்டாமல் விடமாட்டேன், கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறியதாகவும் சாட்சியமளித்துள்ளார். சம்பவ சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் தங்கள் இடத்தில் மண் அடிப்பதற்காக சென்றபோது எதிரிகள் கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், எதிரி சிவக்குமார் இங்கு பிணம் விழுந்தே ஆக வேண்டும் என்று கூறியதாகவும், செல்லமணி கல்லால் எறிய வந்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**18)** சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்படும் அ.சா.3 எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக எந்த ஒரு சங்கதியையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. அதேபோல் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்படும் அ.சா.5 எதிரிகள் இந்த இடத்திற்கு உங்களிடம் பட்டா இருந்தாலும், இல்லையென்றாலும் உள்ளே வந்தால் காலை உடைப்பேன் என்று கூறியதாக முற்றிலும் முரண்பட்டு சொல்லியுள்ளார். எனவே, உண்மையில் அ.சா.1 மற்றும் அ.சா.2–க்கு எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அதனால் மேற்படி இருவருக்கும் உடனடி உயிர் பயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**19)** எதிரிகள் மீதான 329(3), 126(2) BNS பிரிவினைப் பொறுத்து பரிசீலிக்கையில், அ.சா.1 தான் கொடுத்த புகாரில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளில் எதிரிகள் மண் அடிப்பதற்காக கொண்டு சென்ற லாரியை வழியை மறைத்துக் கொண்டு உட்கார்ந்தார்கள் என்று சொல்லியுள்ளார். அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் எதிரிகள் லாரியை வழி மறித்தார்கள் என்றும் புகாரில் சொல்லியது போல் சொல்லியுள்ளார். அ.சா.2 எதிரிகள் லாரியை வழிமறித்து ஒட்டி வந்த ஓட்டுநரை அடிக்கச் சென்றார்கள் என்று கூறியுள்ளார். ஏற்கனவே சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது யாருடைய இடம் என்பது குறித்தும், யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பது குறித்தும் இரு தரப்பினர்களுக்கிடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில், மேற்படி அ.சா.1–ன் நிலத்தில் எதிரிகள் அத்துமீறி நுழைந்ததாகவோ அவர்களது வாகனத்தை சட்ட முரணான வகையில் தடுத்து நிறுத்தினார்கள் என்பது குறித்தோ எந்த முடிவுக்கும் வர இயலாது. மேலும்,

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:55:48 +0530

வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 இவ்வழக்கின் இரு தரப்பினர்களுக்கிடையே மேற்படி சம்பவ இடம் தொடர்பாக உரிமையியல் வழக்கு உள்ளது என்றும், புலன் விசாரணையின்போது உரிமையியல் வழக்கு தொடர்பான ஆவணங்களை பார்க்கவில்லை என்றும், வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் மேற்படி உரிமையியல் வழக்கு உள்ளது தெரியும் என்றும் சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது எதனடிப்படையில் அ.சா.1–க்கு சொந்தமான நிலத்தில் எதிரிகள் அத்துமீறி நுழைந்ததாக சொல்லியுள்ளார் என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20)** இறுதியாக, 1, 3 எதிரிகள் மீதான 329(3), 126(2), 296(b), 351(3) BNS and 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்தும் 2, 4 எதிரிகள் மீதான 329(3), 126(2), 296(b), 351(3) BNS பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்தும் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானித்து U/s.271(1) BNSS–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது .

**21)** இந்த வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீதான பிணைமுறி பத்திரம் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னர் ரத்து செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**22)** இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே சொத்துக்கள் பற்றிய தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மே மாதம் 25–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:55:56 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

1. அ.சா.1 – திருமதி. வசந்தி புகார்தாரர்.
2. அ.சா.2 – திரு. சரவணன்
3. அ.சா.3 – திரு.ராஜீவ்காந்தி
4 அ.சா.4 – திரு.கலையரசன்
5 அ.சா.5 – திரு.பிரபாகரன்
6 அ.சா.6 – திரு.மணிமாறன் சார்பு ஆய்வாளர்

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

1. அ.சா.ஆ.1 – புகார் மனு
2. அ.சா.ஆ.2 – பார்வை மகஜர்
3. அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
4 . அ.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்

**அரசுத் தரப்பு சான்று பொருள் :** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சி :** இல்லை.

**எதிரிகள் தரப்பு சான்றாவணம் :** இல்லை

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.26 15:56:04 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**குறிப்பு :**

வழக்கின் முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையிலிருந்தனர்.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.